அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

திருச்சியில் மாநில வேளாண்மை கண்காட்சி!

ஜூலை 27 முதல் 29 வரை நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 11-

கடந்த மூன்று ஆண்டுகளாக வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கையின் மூலம் பல நூறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 2023-24 ஆம் ஆண்டில் மாநில வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள், வாழை மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 8.07.2023 மற்றும் 9.07.2023 ஆகிய தேதிகளில் சென்னையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான கண்காட்சி முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. வேளாண் வணிகத் திருவிழா 2023 மிக வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் ரூபாய் 2.5 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை ஆகியுள்ளது. அச்சமயம், இது போன்ற கண்காட்சிகள் விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில் நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

இதன் தொடர்ச்சியாக, ஜூலை 27-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி முடிய திருச்சியில் மாநில வேளாண் கண்காட்சி (வேளாண் சங்கமம்) நடைபெறும். இதற்கான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டம் நேற்று (10.07.2023) தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதைகள், தென்னங்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதுடன், அவற்றை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கு தேவைப்படும் அனைத்து வேளாண் இயந்திரங்களையும் காட்சிப்படுத்தி நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கான அனைத்து திட்டங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அமைத்திட வேண்டும் எனவும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். அதிக அளவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

விவசாயிகளுக்கான புதிய தொழில்நுட்பங்கள், மின்னணு விற்பனை, வேளாண் காடுகள், உயரிய தோட்டக்கலை தொழில்நுட்பம், நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண் ஏற்றுமதி போன்ற தலைப்புகளில் கருத்தரங்கம் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், சிறப்புச் செயலாளர் முனைவர் இரா.நந்தகோபால், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் எஸ்.நடராஜன், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமையின் செயல் இயக்குநர் (பொ) த.அன்பழகன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மருத்துவர் ஆர்.பிருந்தாதேவி, வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா.முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாட்டில் முதன்முறையாக சேலம் மாவட்டம், காடையாம்பட்டி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவ திட்டத்தினைத் தொடங்கி வைத்து, சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனைப் பெட்டகத்தினை செவிலியர்களுக்கு நேற்று (10.07.2023) வழங்கினார். உடன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா,மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சவுண்டம்மாள், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் முதன் முதலாக

சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சேலம், ஜூலை 11-

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக "சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்" நேற்று (10.07.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த நிதிநிலை அறிக்கையின்போது சட்டப்பேரவை 110 விதியின் கீழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதனை ஒவ்வொன்றாகச் செயல்படுத்தும் வகையில், சிறுநீரக செயலிழப்பை தொடக்க நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை தமிழ்நாட்டில் முதல் முறையாக சேலம் மாவட்டம், காடையாம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைத்தில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் நேற்று முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

சிறுநீரக செயலிழப்பு, மாரடைப்பு மற்றும் புற்று நோய் இந்த மூன்று நோய் பாதிப்புகளும் தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலகளவில் அச்சுறுத்தும் நோய்களாக உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, இம்மூன்று நோய்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோய் வருவதற்கு முன்பே அதிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளும், நோய் பாதித்தவர்களை பாதுகாக்கின்ற வகையிலும் பல்வேறு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சிறுநீரக பாதிப்பை தொடக்க நிலையில் கண்டறிந்தால் பாதிக்கப்பட்ட நபரை எளிதாக குணப்படுத்த இயலும். இதுவே, நோயின் தன்மை அதிகரித்து சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு விட்டால் டயாலிசிஸ், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற பல்வேறு நிலைக்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்படும்.

தமிழ்நாட்டில் சிறப்பான திட்டம்

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்பது மூளைச்சாவு அடைந்த நபரிடம் இருந்து சிறுநீரகத்தை தானமாகப் பெற்று அதை பொருத்த வேண்டும். இதில் இரத்த வகை இருவருக்கும் பொருத்தமாக இருக்க வேண்டிய நிலையுள்ளது. இவ்வாறு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. தமிழ்நாட்டில் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு பலர் சிறுநீரக தானத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்நிலை வருவதற்கு முன்பே அந்த நோயின் பாதிப்பை தடுப்பது என்பது ஒரு அரசின் கடமை என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு "சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்" என்கிற சிறப்பான திட்டத்தை இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் துவங்கி உள்ளோம்.

சிறுநீரகத்திலிருந்து வெளியேறும் புரதத்திலிருந்து சிறுநீரக செயலிழப்பை கண்டறியும் பரிசோதனை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 8,213 அரசு துணை சுகாதார நிலையங்கள், 2,286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்புர ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களிலும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் சிறுநீரக பாதிப்பு கண்டறியும் பரிசோதனை பெட்டகம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் காடையாம்பட்டியில் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டதன் மூலம் சேலம் மாவட்டத்திற்கு பெருமை சேரும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், காடையாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் "சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்" தொடங்கி வைக்கும் அடையாளமாக, ஆரம்ப நிலையிலேயே சிறுநீரக செயலிழப்பைக் கண்டறியும் பரிசோதனைப் பெட்டகத்தினை இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செவிலியர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சவுண்டம்மாள், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை!

அம்பத்தூர் தொகுதியில் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 11-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை கிழக்கு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் மற்றும் பி.கே.மூர்த்தி எம்.சி., தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி., கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், வி.ரமேஷ் (எ) நீல கண்டன் எம்.சி., டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி., எல்.பி.எப். மோகன், டாக்டர். ஏ.பூர்ணிமா எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., ஜெ.பாலமுருகன் ஆகியோர் வரவேற்பில் 14.07.2023 வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணி அளவில், பாடி, இளங்கோ நகர் பார்க் அருகில் சுமார் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கல்வி உதவி தொகை, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, தூய்மை பணியாளர்கள், விளையாட்டு அணிகள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் 89வது வட்ட கழக செயலாளர் எம்.இ.சேகர் எம்.சி. நன்றி கூறுகிறார்.

எனவே இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற, மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் மாநில மாவட்ட, பகுதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில்

ஆம்னி பேருந்துகள் நிறுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் பி.கே. சேகர் பாபு தலைமை! தனியார் ஆம்னி பேருந்து சங்க உரிமையாளர்கள் பங்கேற்பு!

சென்னை, ஜூலை.11-

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவது குறித்து தனியார் ஆம்னி பேருந்து சங்க உரிமையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (10.7.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவது குறித்து தனியார் ஆம்னி பேருந்து சங்க உரிமையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டமும் மற்றும் அப்பணிகளுடன் சேர்ந்து நடைபெற்று வரும் இதரப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் போக்குவரத்து நெரிசலின்றி செல்வதற்காக சாலை அமைக்கும் பணிகளாக வண்டலூர் - கேளம்பாக்கம் சாலை - இணைக்கும் போலீஸ் அகாடமி சாலை - நல்லம்பாக்கம் சாலை - ஊனமஞ்சேரி வழியாக - ஊரப்பாக்கம் ஜி.எஸ்.டி. சாலை அமைக்கும் பணி, சி.வி.கே. சாலை - ஊரப்பாக்கம் - நல்லம்பாக்கம் சாலை வழி ஊனமாஞ்சேரி வரை தார்சாலை அமைக்கும் பணி, நல்லம்பாக்கம் சாலையில் ஜி.எஸ்.டி. சாலை சந்திப்பு மேம்பாடு அமைக்கும் பணி, கூடுவாஞ்சேரி - மாடம்பாக்கம் சாலையில் பாதுகாப்பு தளவாடங்கள் அமைக்கும் பணி, சாலை வளைவுகளை விரிவுபடுத்துதல் & ஆதனூர் - ஹரிஜன் காலனி சாலை - டிடிசி பணியாளர் காலனி சாலை (ODR) வழியாக மாடம்பாக்கம் வரை சாலை அமைக்கும் பணி மற்றும் வண்டலூர் - வாலாஜாபாத் சாலை மற்றும் மாடம்பாக்கம் யூனியன் சாலை அமைக்கும் பணி ஆகிய 6 எண்ணிக்கையிலான நெடுஞ்சாலைத் துறை பணிகள் அனைத்தும் 15.09.2023 க்குள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென அமைச்சர் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, மாநகரப் பேருந்துக் கழக மேலாண்மை இயக்குநர் அன்பு ஆபிரகாம் , சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், அரசு விரைவு பேருந்து போக்குவரத்துக் கழக பொது மேலாளர்கள், நெடுஞ்சாலைத்துறை, காவல் துறை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்ட கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெடில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் ஆகியோர் பொதுமக்களுக்கு உணவு வழங்கினர். உடன் கார்த்திக் மோகன், எஸ்.சேரன், ஏ.டி.முருகன், வி.ராஜேந்திரன், ஜெ.வீரமணி, டி.தயாளாரங்கன், டி.சம்பந்தா, ஆர்.ஜி.ராகவநாயகம், எம்.பாலசந்தர், எஸ்.முரளிகிருஷ்ணன், பி.வேலாயுதம், ஜெ.மகேஸ்வரி, டி.ஜெ.முருகன், ஆர்.புருசோத்தமன், டி.ராஜி, வி.கண்ணன், எம்.குணசேகரன், கே.செந்தில், கே.தினேஷ்குமார், இ.கல்பனா, என்.எஸ்.சரவணன், 101 வது வட்ட கழக முன்னோடிகள், கழக, பாக நிர்வாகிகள், மன்ற நிர்வாகிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.பாஸ்கர் நன்றி கூறினார்.

சிலம்பம் போட்டியில் மாவட்ட அளவில்

முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்ற மாணவிக்கு பாராட்டு!

தேனி, ஜூலை 11-

ஆண்டிபட்டி அருகே அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை சேர்ந்த மாணவி முதல்வர் கோப்பைக்கான சிலம்பம் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்றதை தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

தமிழ்நாடு அரசின் உத்தரவுப்படி முதல்வர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இது மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து ஏராளமான மாணவிகள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றனர். இந்தநிலையில், ஆண்டிபட்டி அருகே உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் 6 தொழிற் பிரிவுகள் உள்ளது. கம்ப்யூட்டர் பயிற்சி, துணி வெட்டுதல் மற்றும் தையல் வேலை, ஸ்மார்ட்போன் டெக்னீசியன் மற்றும் ஆப் பரிசோதித்தல், தகவல் தொழில்நுட்பம், டெக்ஸ்டைல் இயந்திரவியல், குளிர்பதனம் மற்றும் தட்பவெட்ப நிலை போன்ற பிரிவுகளில் சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த தொழில் பயிற்சி நிலையத்தில் ஸ்மார்ட் போன் டெக்னீசியன் மற்றும் ஆப் பரிசோதித்தல் பிரிவில் படிக்கும் பரமேஸ்வரி என்ற மாணவி முதல்வர் கோப்பைக்கான சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு மாவட்ட அளவில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்றுள்ளார். அதே போல் சிலம்பம் ஒற்றை வால் வீச்சு போட்டியில் கலந்துகொண்டு வெண்கல பதக்கம் பெற்றுள்ளார்.

இந்த மாணவியை பாராட்டும் வகையில் அரசு தொழில் பயிற்சி நிலையம் முதல்வர் சரவணன் நினைவு பரிசு வழங்கி பாராட்டினார்.

மேலும் இதனை ஊக்குவித்த பயிற்றுநர் திலகம் என்பவரை பாராட்டினார். இதே போல் வெற்றி பெற்ற மாணவியை அனைத்து ஆசிரியர்களும், பெற்றோர்கள் மற்றும் சக மாணவிகளும் பாராட்டினார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பெரி. அழகு

ஜூலை 11 (1997)

கழகம் துவங்கிய காலத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர். திருப்பத்தூர் தொகுதியின் வட்டச் செயலாளராக பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். பின்பு இராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

சிவபுரிபட்டி ஊராட்சித் தலைவராகவும், சிங்கம்புணரி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பணியாற்றி மக்களிடம் நற்பெயர் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன், குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் – மிசா கைதியாக ஓராண்டு காலம் மதுரை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.